# கே.ஆர்.கல்வி நிறுவனங்கள், கே.ஆர்.நகர், கோவில்பட்டி - 628 503.

## இலட்சுமி அம்மாள் நினைவு கோப்பை பதினொன்றாவது அகில இந்திய ஹாக்கிப் போட்டி - 2019

## May 16 - 26, 2019

### தகுதிச் சுற்று போட்டிகள்

**13.05.2019**

கோவில்பட்டி, கே.ஆர்.மருத்துவம் மற்றும் கல்வி அறக்கட்டளையின் சார்பில், கே.ஆர்.கல்வி நிறுவனங்கள், இலட்சுமி அம்மாள் ஸ்போர்ட்ஸ் அகாடமியுடன் இணைந்து இலட்சுமி அம்மாள் நினைவு கோப்பைக்கான அகில இந்திய ஹாக்கிப் போட்டிகள் கடந்த பத்து ஆண்டுகளாக சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டும் அதே போல இலட்சுமி அம்மாள் நினைவு கோப்பை பதினொன்றாவது அகில இந்திய ஹாக்கிப் போட்டிகள் புது டெல்லி, ஹாக்கி இந்தியாவின் அனுமதியுடன் வருகின்ற **மே 16ம் தேதி முதல் மே 26ம் தேதி வரை** கோவில்பட்டி செயற்கை புல்வெளி மைதானத்தில் பகல் இரவு ஆட்டமாக மின்னொளியில் நடைபெற உள்ளது.

பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த தேசிய நடுவர்கள் கலந்து கொண்டு போட்டியை நடத்த உள்ளனர். இப்போட்டியில் கலந்து கொள்ள அகில இந்திய அளவில் பல்வேறு அணிகளுக்கு அழைப்பிதழ் அனுப்பப்பட்டது. இதில் 16 சிறந்த அணிகள் தேர்வு செய்யப்பட்டு இப்போட்டிகளில் விளையாட உள்ளன. யூனியன் வங்கி - மும்பை, கனரா பேங்க் - பெங்களூர், ஹாக்கி பெங்களூரு - பெங்களூர், பிஇஜி & சென்டர் கிர்கீ ஹாக்கி டீம் - புனே, சிஐஎஸ்எப் - சண்டிகர், சவுத் சென்ட்ரல் ரயில்வே - செகந்தராபாத், நேஷனல் ஹாக்கி அகாடெமி - நியூடெல்லி, ஆல் இந்திய கஸ்டம்ஸ் & ஜிஎஸ்டி - நியூடெல்லி, ஹாக்கி கூர்க் - கர்னாடகா, ஈஸ்ட் கோஸ்ட் ரயில்வே - புவனேஷ்வர், ஸ்போர்ட்ஸ் ஹாஸ்டல் - புவனேஷ்வர் மற்றும் லட்சுமி அம்மாள் ஸ்போர்ட்ஸ் அகாடெமி அணி - கோவில்பட்டி உட்பட 16 அணிகள் கலந்து கொள்கின்றன. இப்போட்டிகள் கால் இறுதி ஆட்டம் வரையில் லீக் முறையிலும், கால் இறுதி, அரை இறுதி மற்றும் இறுதி போட்டிகள் அனைத்தும் நாக் அவுட் முறையிலும் நடைபெறுகிறது. கலந்து கொள்ளும் அணி வீரர்கள் அனைவருக்கும் போக்குவரத்து செலவுகள் தங்குமிட வசதி, உணவு அனைத்தும் அறக்கட்டளையினரால் வழங்கப்படுகிறது.

தினமும் காலை 6.30 மணிக்கு ஒரு போட்டியும் மாலை 4.30 மணிக்கு ஒரு போட்டியும் 6.30 மணிக்கு ஒரு போட்டியும் இரவு 8.00 மணிக்கு ஒரு போட்டியும் மொத்தம் நான்கு போட்டிகள் நடைபெற உள்ளன.

போட்டிகளில் முதலிடம் பெறும் அணிக்கு ரூபாய் ஒரு இலட்சமும், இரண்டாவது இடம் பெறும் அணிக்கு எழுபத்து ஐந்தாயிரமும், மூன்றாவது இடம் பெறும் அணிக்கு ஐம்பதாயிரமும், நான்காவது இடம் பெறும் அணிக்கு முப்பதாயிரமும் இலட்சுமி அம்மாள் நினைவு சுழற்கோப்பையுடன் வழங்கப்பட உள்ளது. மேலும் கால் இறுதி சுற்றுக்கு தகுதி பெறும் நான்கு அணிகளுக்கு ஆறுதல் பரிசாக ரூபாய் இருபதாயிரம் வீதம் வழங்கப்பட உள்ளது. நடுவர்களால் தேர்வு செய்யப்படும் சிறந்த முன்கள ஆட்டக்காரர், பின்கள ஆட்டக்காரர், நடுகள ஆட்டக்காரர் மற்றும் சிறந்த தடுப்பாளர் விருதுகளும் தனி நபர்களுக்கு வழங்கப்பட உள்ளன.

### தகுதிச் சுற்று போட்டிகள்

தகுதிச் சுற்று போட்டிகள் மே 13ம் தேதி முதல் மே 15ம் தேதி வரை நடைபெற உள்ளன. இப்போட்டிகளில் தெற்கு இரயில்வே-சென்னை, இந்தியன் பேங்க்-சென்னை, ஐ.சி.எப்-சென்னை, ஜிஎஸ்டி & சென்ட்ரல் எக்ஸிஸ்-சென்னை தமிழ்நாடு போலீஸ்-சென்னை, இன்கம் டேக்ஸ்-சென்னை, எஸ்ஏஐ-சென்னை எஸ்டிஏடி எக்ஸ்செலன்ஸ்-கோவில்பட்டி, ஹாக்கி புதுச்சேரி-புதுச்சேரி ஆகிய அணிகள் தகுதிச் சுற்றுப் போட்டியில் பங்கேற்று விளையாடி வருகின்றனர்.